Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 241

சனிக்கிழமை
26 ஜூலை 2025

ஆடி 10 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

கிளிநொச்சி, ஜூலை 26
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் பகுதியில் 7 கிராம் ☞ 11

## தவறான முடிவெடுத்து ஒருவர் பலி

யாழ்., ஜூலை 26
யாழ்ப்பாணம் கொட்டடி பகுதியைச் சேர்ந்த 48 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவர் தவறான முடிவெடுத்து நேற்று முன்தினம் உயிரிழந் ☞ 11

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் கைதான

# 16 தமிழ் இளைஞர்கள் நீதிமன்றால் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 26
தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முனைந்தனர் என்ற குற்றச்சாட்டில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்திக் கடந்த 2020ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட 16 தமிழ் இளைஞர்கள் கொழும்பு ☞ 11

செம்மணிப் புதைகுழியில்

## 2 என்புத்தொகுதிகள் நேற்றும் அவதானிப்பு


யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது மேலும் இரண்டு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், ஐந்து என்புத் ☞ 10

## முறைப்படி அடக்கம் செய்யப்பட்ட என்புத்தொகுதி மீண்டும் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின், இரண்டாவது அகழ்வுத் தளத்தில் இருந்து முறைப்படி அடக்கம் செய்யப்பட்ட என்புத் தொகுதி அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் அது ☞ 10

என்புத்தொகுதிகளைக் கண்டறிய

# செம்மணிப் புதைகுழிப் பகுதிகளை நவீன ஸ்கான் மூலம் ஆராய முடிவு!



யாழ்ப்பாணம், ஜூலை 26
அரியாலை செம்மணி மனிதப் புதைகுழியில், ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம், பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றன. ☞ 11

## தென்னக்கோன் நீக்கம்; ஓகஸ்ட் 5 இல் விவாதம்

கொழும்பு, ஜூலை 26
பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பான விவாதம் ஓகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. ☞ 10

## உள்ளக விசாரணையை தமிழரசு கோரவில்லை!

எவரும் பாடமெடுக்கத் தேவையில்லை
சி.வீ.கே.சிவஞானம் கடும் காட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
உள்ளக விசாரணை தொடர்பிலோ, சர்வதேச விசாரணைகள் வேண்டாம் என்றோ இலங்கைத் தமிழரசுக் கட்சி எங்கும் எவரிடமும் வலியுறுத்தவேயில்லை. எனவே, விதண்டாவாதமான செயற்பாடு ☞ 10

நாணய நிதியத்தின்

## ஐந்தாம் கட்ட நடவடிக்கை செப்ரெம்பரில் இடம்பெறும்!

கொழும்பு, ஜூலை 26
சர்வதேச நாணய நிதியத்தின் ஐந்தாம்கட்ட கடன் வழங்கல் தொடர்பான நடவடிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகும் ☞ 11

கிளிநொச்சியில்

## பொலிஸ் காவலில் இருந்தவர் தூக்கிட்டு உயிர்மாய்ப்பு!

கிளிநொச்சி, ஜூலை 26
கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார் என்று ☞ 11



முச்சந்தி முரளி

'இப்பிடி பிழையே செய்யாதவையைப் பிடிக்கத்தான் உந்தச் சட்டத்தை பயங்கரமாப் பாவிக்கினம் கண்டியளோ'

ஈஸ்டர் தாக்குதல்

## எந்தத் தடை வரினும் நீதி நிலைநாட்டப்படும்

கொழும்பு, ஜூலை 26
உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் எதுவும் மறைக்கப்படாது. எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ☞ 11

மாகாணசபைத் தேர்தலை நடத்தி

## வடக்கு, கிழக்கு மக்களுக்கு அதிகாரங்களைப் பகிருங்கள்!

நளின் பண்டார எம்.பி. வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 26
மாகாணசபை முறைமையென்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகும். எனவே, அந்தத் தேர்தலை நடத்தி மக்களிடம் உரிய முறையில் அதிகாரத்தை ☞ 11

## புதிய அரசியலமைப்பில் வெளிப்படை பேணப்படும்

பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 26
புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய முதற்கட்ட நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது. இந்த விடயத்தில் இரகசிய நடவடிக்கை எதுவும் இல்லை. வெளிப்படைத்தன்மை பேணப்படும் - இவ்வாறு பிரதமர் ☞ 11

## நல்லூரில் இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது 'விடுதலை' போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
சிறைகளுக்குள் படுகொலை செய்யப்பட்ட அரசியற்கைதிகளை நினைவுகூர்ந்தும், சிறையிலிருந்து விடுவிக்கப்படாத தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தியும் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 'விடுதலை' என்னும் தொனிப்பொருளில் அமைந்த போராட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்றும் முன்னெடுக்கப்பட்டன.
நேற்றைய போராட்டத்தின் ☞ 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹஸன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 | திகதி 25.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4143 | சீட்டிழுப்பு இலக்கம் 1210 | சீட்டிழுப்பு இலக்கம் 0169 | சீட்டிழுப்பு இலக்கம் 2249 | சீட்டிழுப்பு இலக்கம் 5901 | சீட்டிழுப்பு இலக்கம் 1931 | சீட்டிழுப்பு இலக்கம் 0476 | சீட்டிழுப்பு இலக்கம் 0017 |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து U | ஆங்கில எழுத்து A | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கினம் மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் 38 43 56 65 | வெற்றி இலக்கங்கள் 11 24 36 39 | வெற்றி இலக்கங்கள் 4 5 7 0 | சுப்பர் இலக்கம் 09 | வெற்றி இலக்கங்கள் 2 4 2 1 2 7 | வெற்றி இலக்கங்கள் 34 59 60 69 | வெற்றி இலக்கங்கள் 2 1 2 7 | வெற்றி இலக்கங்கள் 19 22 31 37 |
| விசேட எழுத்து V | | | வெற்றி இலக்கங்கள் 04 15 39 48 | | விசேட எழுத்து E | | |

# கறுப்பு ஜூலை சூத்திரதாரிகளில் தற்போதுள்ளவர் ரணில் மட்டுமே

## பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 26**

**யாழ்ப்பாணம் நூலகத்தை எரித்த மற்றும் கறுப்பு ஜூலையை உருவாக்கிய அமைச்சரவையில் இருந்தவர்களில் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே தற்போது இருக்கின்றார் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கல்வி மறுசீரமைப்பு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கை தொடர்பில் பேசும்போது வெள்ளைப் பத்திரிகை தொடர்பில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அந்தப் பெயரைக் கூறும் போதே எமக்குப் பயம் வருகின்றது. 1981ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவால் கொண்டு வரப்பட்ட வெள்ளைப் பத்திரிகையின் நோக்கம் முழுமையாகக் கருமையானது.

அந்த வெள்ளைப் பத்திரிகை மூலம் கறுப்பு வேலைத்திட்டங்களைக்கொண்டு வந்த ரணில் போன்றோரே யாழ்ப்பாணம் நூலகத்துக்குத் தீ வைத்தனர். கறுப்பு ஜூலையையும் ஏற்படுத்தினர். இப்போது அரகலய வழக்கிலும் ரணில் தோல்வியடைந்துள்ளார். கறுப்பு ஜூலையை உருவாக்கிய அப்போதைய அமைச்சரவையில் இருந்தவர்களில் தற்போதுள்ள ஒருவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே - என்றார். (ஏ-இ)

## ரணிலுக்கு எதிராக தேரர் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 26

மிகிந்தலையில் உள்ள 2 ஆயிரம் ஆண்டுகள் பழமையான அனுலா சைத்தியை 300 மில்லியன் ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட 9 பேருக்கு எதிராக மிகிந்தலை விகாராதிபதி தம்மரத்ன தேரர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புத்தசாசன முன்னாள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, முன்னாள் தொல்பொருள் ஆணையாளர் நாயகம் பேராசிரியர் துசித மெண்டிஸ், முன்னாள் தொல்பொருள் இயக்குநர் நாயகம் நிஷாந்தி ஜெயசிங்க, திட்டமிடல் இயக்குநர் அனுர பண்டார ஆகிய ஒன்பது பேருக்கு எதிராகவே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

2,000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான சைத்தியை மிக மோசடியான முறையில் விற்கப்பட்டுள்ளது. மல்வத்த மகாநாயக்க தேரரும் ஏமாற்றப்பட்டார். தேரர்களுக்கு இது தொடர்பாகத் தெரியாது. இதுதொடர்பாக குற்றப் புலனாய்வுத்துறை நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன் என்று மிகிந்தலை விகாராதிபதி தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

அனுலா சைத்தியை என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கி.மு. 3ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது என்று நம்பப்படும் நினைவுச்சின்னமாகும். (ஏ-இ)

# பட்டப்படிப்பு முடித்தோருக்கு நியமனங்களை வழங்குங்கள்

## வலியுறுத்துகின்றார் சஜித்



கொழும்பு, ஜூலை 26

அரச பல்கலைக்கழகங்களில் கல்வி இளமாணி பட்டப்படிப்பை நிறைவு செய்த 250 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொழும்பு, பேராதனை மற்றும் திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 250 கல்வி இளமாணி பட்டதாரிகளுக்குக் கிட்டத்தட்ட 2 ஆண்டுகளாக நியமனம் வழங்கப்படாமலுள்ளது. இவ்வாறு 3 குழுக்கள் ஆசிரியர் நியமனம் வழங்கப்படாதுள்ளன.

உயர்தரத்தில் அமைந்த பட்டங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி பெற்ற அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் சூழலில், அமைச்சரவை முடிவுகள் காரணமாக நியமனங்கள் தாமதமாகியுள்ளன.

கல்வி இளமானிப் பட்டதாரிகள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குத் தீர்வொன்றைப் பெற்றுக் கொடுங்கள்.

நியமனங்களை வழங்கும் விடயத்தில் சட்டப் பிரச்சினை தடையாக இருந்தால், அந்தச் சட்டப் பிரச்சினையைத் தீர்த்து நியமனங்களைப் பெற்றுக் கொடுங்கள்- என்றார். (ஏ-இ)

# பி. தயாரத்ன காலமானார்



கொழும்பு, ஜூலை 26

முன்னாள் அமைச்சர் பி. தயாரத்ன நேற்றுக் காலை கொழும்பில் காலமானார்.

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அம்பாறை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியலில் நுழைந்த பி. தயாரத்ன, ஜே.ஆர்., ஜெயவர்த்தன, ஆர். பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்கா, சந்திரிகா பண்டாரநாயக்க, குமாரதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ச ஆகிய ஜனாதிபதிகளின் கீழ் அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | வெற்றி வாரம் 0609 |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 2 1 2 5 3 9 | |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2875 | ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கம் 26 32 51 80 | |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து A | வெற்றி இலக்கம் 10 22 35 77 | வெற்றி வாரம் 5036 |

| SASIRI | |
|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் 0733 | வெற்றி இலக்கம் 14 34 35 |


| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| மேஷம் | வெற்றி இலக்கம் 21 35 56 57 | சீட்டிழுப்பு வாரம் 4587 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து D | சுப்பர் இலக்கம் 21 | வெற்றி இலக்கம் 15 25 29 38 | வெற்றி வாரம் 2051 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 25.07.2025 | தினம் வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கம் 05 42 50 70 | வெற்றி வாரம் 2701 |

# மாகாணசபை முறைமை பலவீனப்படுத்தும் அரசு!

## சாணக்கியன் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 26

மாகாணசபை முறைமையை பலவீனப்படுத்துவதற்கு அமைச்சுகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றதா என்ற சந்தேகம் எழுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குட்பட்ட வீதிகளாகும். மேலும் சில வீதிகள் பிரதேசசபைக்கு உட்பட்டவையாகும். எனினும், நிதியை மத்திய அரசாங்கம் வைத்துள்ளது. மாகாண அரசுக்குகீழ் வரும் வீதிகளை அபிவிருத்தி செய்வதாக இருந்தால், நாம் மத்திய அரசிடம் கேட்க முடியாத சூழ்நிலையும் உள்ளது.

அத்துடன், மாகாணசபை முறைமையை பலவீனமாக்கும் செயற்பாடுகளை எல்லா அமைச்சுகளும் முன்னெடுப்பது போல்தான் தெரிகின்றது - என்றார். (ச-44.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலை வன்முறைகள்

# இலங்கையின் சோக அத்தியாயம்

## கனடா பிரதமர் தெரிவிப்பு



**றொறன்ரோ, ஜூலை 26**

**கறுப்பு ஜூலை இலங்கையின் வரலாற்றில் ஒரு சோக மான அத்தியாயம் என்று கனடாவின் பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

கறுப்பு ஜூலை தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக் கையிலேயே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ள தாவது:-

42 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனப்படு கொலை வெடித்தது. ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட் டனர், குடும்பங்கள் உடைந் தன, எண்ணற்றோர் வெளி யேறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இலங்கை வரலாற் றில் கருப்பு ஜூலை ஒரு சோக மான அத்தியாயமே. 1983 ஆம் ஆண்டு துன்புறுத்த லில் இருந்து தப்பி ஓடும் ஆயி ரத்து 800க்கும் மேற்பட்ட தமிழர்களை வரவேற்க கனடா ஒரு சிறப்பு நடவடிக்கை திட் டத்தைச் செயற்படுத்தியது. 2022 ஆம் ஆண்டில் கனடா நாடாளுமன்றம் மே 18 ஆம் திகதியை தமிழ் இனப்படு கொலை நினைவு தினமாக ஒருமனதாக அறிவித்தது இது உண்மை, நீதி மற்றும் பொறுப் புக்கூறலுக்கான நீடித்த அர்ப் பணிப்பாகும்.

இந்தக் கொடுமைகளில் பாதிக்கப்பட்டவர்களையும் உயிர் பிழைத்தவர்களையும் நினைவுகூர்வதில் கனடா தமிழ் கனேடியர்களுடன் நிற் கிறது. இந்த நாளில் இழந்த உயிர்களை நாங்கள் போற் றுகிறோம்.

அர்த்தமுள்ள நீதி மற்றும் பொறுப்புக்கூறலுடன் கூடிய உலகைக் கட்டியெழுப்புவதற் கான எங்கள் பணியை உறு திப்படுத்துகிறோம் - என்றுள் ளது. (எ-இ)

# போதைப்பொருளுடன் கனேடியர் கைது

கொழும்பு, ஜூலை 26

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 400 மில்லி யன் ரூபாய் பெறுமதியான போதைப்பொருள்களுடன் கனே டியப் பிரஜை ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒன்றாரியோவைச் சேர்ந்த 52 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரது உடைமை யில் 12.196 கிலோகிராம் ஹசிஷ் மற்றும் 5.298 கிலோகிராம் கொக் கெய்ன் ஆகிய போதைப்பொருள் கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச)

# யாழ்.புதிய பேருந்து நிலைய நடைமுறை இப்போதில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 26

இலங்கைப் போக்குவரத்துச்சபை மற்றும் தனியாரின் நெடுந்தூரச் சேவைகள் யாழ்.புதிய பேருந்து நிலை யத்திலிருந்தும், இலங்கை போக்குவரத்துசபை மற் றும் தனியாரின் உள்ளூர் சேவைகள் தற்போது இலங்கை போக்குவரத்துசபை செயற்படும் மத்திய பேருந்து நிலையத்திலிருந்தும் மேற்கொள்வதென எடுக்கப்பட்ட முடிவு நடைமுறைப்படுத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென வடக்கு மாகாண ஆளு நர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

(ச-66,9)




# மாலைதீவு செல்கிறார் அநுர

கொழும்பு, ஜூலை 26

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் முய்சு வின் அழைப்பின்பேரில், ஜனாதிபதி அநு ரகுமார திஸாநாயக்க எதிர்வரும் திங்கட்கி ழமை மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவிக்கு வந்த பின் னர் மாலைதீவுக்கு மேற்கொள்ளும் முதல் உத்தியோகபூர்வப் பயணம் இதுவாகும்.

இதன்போது இருதரப்பு உறவுகளை வலுப் படுத்துதல், வர்த்தகம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக் குறித்து இருநாட்டுத் தலை வர்கள் கலந்துரையாடுவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது. (ச-இ)

## வாசகர் திருமுகம்



கடந்த 21.07.2025 வெளிவந்த உதயன் பத்திரிகையில் கனகன்புளியடிச்சந்தியை யும் சரசாலை ஊடாக வடமராட்சியையும் இணைக்கும் வீதியைப் பற்றிய பட்சியின் நுண் அவதானிப்புப் பதிவை இரசனையு டன் என்னால் வாசிக்கமுடிந்தது.

இந்தப்பாதை தரும் வலிகளை அனுபவித் துக்கொண்டு இருப்பவர்களுள் நானும் ஒருவன். வலிகளை வெறும் வலிகளாகக் கொண்டுவராது அவற்றையெல்லாம் ஓர் எள்ளல் இழையோட அங்கதமாக எழுதிய மையே பட்சியின் பேனையின் வலிமையா கும். வலிகள் யாவும் வேறு ஒரு வடிவமைப் புக்குள் வந்துள்ளன.

கடும் வலிகள் யாவும் இவ்வாறுதான் மாறும் என்பதே உண்மை. உரியவர்கள் இதனை வாசித்து நடவடிக்கைளை மேற்கொள்வார் களா? அல்லது "குன்றுங்குழியும் குறுகி வழி நடந்து சென்று திரிவது என்றுந்தீ ராதோ" என்ற இரட்டைப்புலவர்களுள் ஒரு வரின் வரிகளின் நிலையோ? என எண்ண வும்வேண்டியிருக்கிறது.

க.[illegible]




## மகோகனியில ஒரு மாறாட்டம்

**ஆள்மாறாட்டம் செய்யிற ஆக்களைக் கண்டிருப்பியள். அதி லையும் சோதினையளில ஆள்மாறாட்டம் செய்து. ஒரா ளுக்காக இன்னொருத்தர் போய் சோதினை எழுதிறதையெல் லாம் அறிஞ்சிருப்பியள். அப்பிடிச் சோதினையளில ஆள் மாறாட்டம் செய்யிறதை 'குதிரையோடுறது' எண்டு சொல்லு வினம். ஆள்மாறாட்டம் செய்யிறமாதிரி 'மரமாறாட்டம்' செய்து ஒருத்தர் மாட்டுப்பட்டிருக்கிறார். இவர் குதிரையோடா மல் 'கதிரையில' ஓடி விளையாட்டுக்காட்டியிருக்கிறார். உப்பிடி மாறாட்டமான ஆள் எங்க இருப்பார் எண்டு நினைக்கிறியள்? மெத்தப்படிச்சவை இருக்கிற யாழ்ப்பாணக் கம்பஸிலதான் இந்த மாறாட்டம் நடந்திருக்குது. அங்க இருக்கிற 'இணைந்த விஞ்ஞான பீடத்துக்கு' கதிரை மேசையள் வேணுமெண்டு 'ரெண்டர்' போட்டவை. அதில உந்த ரெண்டரைத் தீர்மானிக் கிற இடத்தில இருக்கிற (காசைக் கையாளுற) பெரும் புள்ளி ஒருத்தர் இப்பிடி பில் இல்லாத 'வில்லு' கொம்பனி எண்டு ஏதோ ஒரு பேரைப் போட்டு, அந்த ரெண்டரை எடுத்திட்டார். சரி, கம்பஸ் சம்பளம் பத்தாட்டி இப்பிடிச்சிலர் வெளிவேலையள் செய்யினம் எண்டு அதையாவது கண்டும்காணாமல் விட்டி டலாம். ஆனால் அதுக்குப் பிறகுதான் அவர் விளையாட் டுக்காட்டியிருக்கிறார்.**

**அந்த ரெண்டரில தேக்குமரத்தில கதிரை, மேசை செய்யிற துக்கு எவ்வளவு செலவாகும் எண்டுதான் கணக்குக் காட்டியிருக்கு. ஆனால் வந்திறங்கின கதிரை, மேசையளோ மகோகனி மரத்தில செய்பட்டிருக்கு. பெரிசா உதுகளை ஆரும் கண்டுபிடிக்கமாட்டினம். ஆனால் உந்தப் பொருள்களைச் செக் பண்ணிறதுக்கெண்டு பொறுப்பா இருக்கிறவைக்கு மகோகனியில செய்ததா இல்லாட்டி தேக்கில செய்ததா எண்டு தெரியும் தானே. அப்பிடிச் செக் பண்ணேக்கதான் அந்த 'வில்லு' நிறுவனம், தேக்குமரமெண்டு சொல்லிப் போட்டு மகோகனியில செய்துதந்து கம்பஸ் காசில சம்பல் அரைச்சிருக்கினம் எண்டு தெரியவந்திருக்குது. இப்பிடித் தன்ர குட்டு வெளியில வருமெண்டு அந்தப் பெரும்புள்ளி கனவிலையும் நினைச்சுப்பார்க்கேலை. அதால கள்ளனுக் குத் தேள் கொட்டினமாதிரி என்ன செய்யிறதெண்டு தெரியா மல் நிண்டிருக்கிறார். சொன்ன சொல்லுக்கு மாறா, தேக்கு மரத்தில கதிரை மேசையளைச் செய்யாமல் விலை குறைஞ்ச மகோகனியில செய்ததால உடனடியா அந்தக் கதி ரையளை அந்தக் கொம்பனிக்குத் திருப்பி கம்பஸ்காரர் அனுப்பிப் போட்டினம்.**

**வேற ஏதும் கொம்பனியள் இப்பிடிப் பேய்க்காட்டி இருந்தால், உடனேயே அந்தக்கொம்பனி இனிமேல் கம்பஸுக்கு எந்தச் சாமான் சக்கட்டும் தந்து உழைக்கேலாதபடி 'கறுப்புப்பட்டிய லில' சேர்த்திருக்கோணும். அதுதான் முறை. ஆனால், திரும் பவும் தேக்கில கதிரை மேசையளைச் செய்து தரச்சொன் னதோட, "ஏன் இப்பிடி சொன்னதுக்கு மாறா மகோகனியில செய்தனீங்கள்?" எண்டு ஒரு விளக்கக்கடிதமும் தான் அடிபட்டிருக்குது. மாமியார் உடைச்சால் மண்குடம், மருமகள் உடைச்சால் பொன்குடம் எண்ட கணக்கா, இப்பிடி மற்றக்கொம்பனியளோட காட்டுற இறுக்கத்தை இந்தக் கொம்பனியோட கம்பஸ்காரரும் காட்டப் பயப்பிடுகினம். ஏனெண்டால் அந்தக் கொம்பனிக்கு இந்தக் காசைக் கையாள்ற 'பெரும்புள்ளிதான்' உண்மையான முதலாளி. சிக்கல் வந்தாலுமெண்டு பினாமியளை வைச்சு கொம்ப னியை நடத்திறார். தட்டுமுட்டுச் சாமானில இருந்து கொம்பி யூட்டர் வரைக்கும் "என்ன வளமில்லை எங்கள் கொம்பனி யில?" எண்டு கேக்கிறமாதிரி எல்லாச் சாமானுக்கும் ஒரு கொம்பனி மட்டும்தான் கொஞ்சநாளா ரெண்டர் எடுக்குதாம். அப்பிடி ஒரே கொம்பனியின்ர கையில எப்பிடி ரெண்டர் போகுது? வேற கொம்பனியள் ஏன் ரெண்டருக்கு 'கோட்டே சன்' அனுப்பிறேலை எண்டதெல்லாம் 'சிறப்பான' அந்தப் பெரும் புள்ளிக்குத்தான் வெளிச்சம். இந்த "மரமாறாட் டம்" சம்பந்தமா மேலிடங்களுக்கும் முறைப்பாடு பறந்திருக்காம். இனியும் அவர் 'சிறப்பான' சம்பவங்களைச் செய்யிறதுக்கு கம்பஸ் இடம் குடுக்கப் போகுதோ இல்லையோ எண்டது போகப்போகத்தான் தெரியும்.**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்குமேல் தொடங்கவும். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறு அளவில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். இன்று நீங்கள் தொடங்க நினைக்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். அலுவலகத்தில் காலையில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**கன்னி:** தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் தொடங்கும் முயற்சி சாதகமாகமுடியும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். முயற்சிகள் வெற்றிகரமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத் துணை ஆதரவாக இருப்பார்.

**கும்பம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு அலுவலகப்பணியின் காரணமாக வெளியூர் செல்லவேண்டிவரும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை வாங்கித் தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.



# நல்லூர் ஆலயச்சூழல் கொடிகளால் அலங்கரிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 25 நாள்கள் மஹோற்சவ திருவிழாக்கள் நடைபெறவுள்ளன. அதனை முன்னிட்டு ஆலய வெளி வீதியைச் சுற்றி சிவப்பு வெள்ளைத்துணிகள் கட்டப்பட்டு, திருவிழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுவருகின்றன. மஹோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்சத் திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதியும், 22ஆம் திருவிழாவான மாம்பழத் திருவிழாவும் எதிர்வரும் ஓகஸ்ட்19ஆம் திகதியும், 24ஆம் திருவிழாவான தேர்த்திருவிழா ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழா இடம்பெற்று , மாலை கொடியிறக்கத்துடன் மஹோற்சவம் நிறைவுபெறும். (ச)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை26

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கிளைக் கூட்டங்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அந்தந்தக் கிளைகளில் நடைபெறுமென பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.

சங்கத்தின் 23 கிளைகளின் அங்கத்தவர்களுக்கும் தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் கிளை உறுப்பினர் தெரிவு இடம்பெறவுள்ளதால் கிளைகளின் அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)

## நுழைவாயில் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 26

சிவகுரு ஆதீனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயில் மற்றும் புனரமைக்கப்பட்ட மண்டபத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-66)



சர்வதேச வலுத்தூக்கல் போட்டி

# யாழ்.மாணவிக்கு வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 26

இளையோருக்கான சர்வதேச வலுத்தூக்கல் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி 65 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்ற நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜெகனிகா ஜஸ்ரின் இரண்டு வெள்ளிப்பதக்கங்களைத் தனதாக்கியுள்ளார். இந்தப் போட்டி தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25)

## கூட்டம் பிற்போடல்

மீசாலை பழ உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்று சனிக்கிழமை இந்தக் கூட்டம் நடைபெறவிருந்தநிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமென பிரதேசக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (ச-9)



# மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை26

புலோலி அறிவகம் சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிக் கழகங்களுக்கு இடையிலான 10 கிலோ மீற்றர் மரதன் ஓட்டப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. தொடர்ந்து அன்றைய தினம் மாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு நிகழ்வுகள், கலைநிகழ்வுகள், போட்டி நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-100)

பனைசார் உற்பத்திகள்

# கண்காட்சியும் விற்பனையும் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ்ப்பாணம் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுவரும் பனை சார் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும் நிகழ்வின் இறுதி நாள் நிகழ்வு இன்று வடமாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்களுக்கான விருது வழங்கல், பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஓவியப்போட்டி நிகழ்வுகளுக்கான மாவட்ட ரீதியானதும் மாகாண ரீதியானதுமான பரிசில்கள் வழங்குதல், சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்குதல் என்பவற்றுடன் நம் மரபுடன் பின்னிப்பிணைந்த பனைவளம் சார் பெருமைகளை எதிர்கால சந்ததியினருக்கு கடத்தும் வகையில் 'தாலம்' சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ச-25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

மனித சுதந்திரத்தைப் பறித்து
தன்னடக்கத்தையும் ஊக்கத்தையும்
உண்டாக்க முடியாது.

– ஆபிரகாம் லிங்கன் –


# இயந்திரச் சுமைக்கு எப்போதுதான் விடிவு?

இலங்கை நாடாளுமன்றத்தில் நீண்டநாள்களின் பின்னர், ஆக்கபூர்வமான ஒரு கருத்து முன்வைக்கப்பட்டிக்கின்றது. 'தற்போதைய கல்விக் கட்டமைப்பு மாணவர்களுக்கு இயந்திரச் சுமையாக அமைந்திருக்கின்றது. ஆதலால், இந்தக் கட்டமைப்பு மிக விரைவில் மறுசீரமைப்புச்செய்யப்பட வேண்டும்'என்றுவலியுறுத்தியுள்ளார் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. சீரற்ற வளப்பங்கீடு, ஓரிடத்தில் குவிந்திருக்கும் ஆசிரிய ஆளணி, மாணவர்களே இல்லாமல் இயங்கும் பாடசாலைகள், மாணவர்களின் இடைவிலகல்கள் என்று பல்வேறு விடயங்கள் தொடர்பில் நீண்ட விளக்கத்தை வழங்கி, அனைத்துத் தரப்பினரையும் புதிய கல்விச் சீரமைப்புக்கு ஒத்துழைப்புத் தருமாறும் அழைத்திருக்கின்றார் அவர்.

வெறுமனே பரீட்சைகளையும், மதிப்பீடுகளையும் கொண்ட, 20ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்விக் கொள்கையைத்தான் இலங்கை இன்றளவும் பின்பற்றுகின்றது. உலகமே ஒதுக்கி விட்ட கல்விக் கொள்கையை இப் போதும் தன் இதயத்துடிப்பாக இலங்கை கொண்டிருப்பது பெரும் அபத்தம். இவ்வாறான நிலையில், அந்தக் கல்விக் கட்டமைப்பில் இனியாவது மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற முனைப்பில் அரசாங்கம் செயற்படுவது நிச்சயம் பாராட்டப்பட வேண்டியதே. அனைத்துத் துறைகளிலும் பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை, மனிதவளத்தை சரிவர முகாமை செய்வதும், மேம்படுத்துவதும்தான் மீட்சிக்கு வழிவகுக்கும். இந்த நீண்டகாலச் செயற்றிட்டத்தின் ஆரம்பக்கட்டமைப்பு பள்ளிக் கல்விதான். ஆகையால், விமர்சனங்களுக்கு அப்பால், கல்விக் கொள்கையின் மட்டில் அரசாங்கத்தின் பயணம் சரி என்பதுடன், அதுவே காலத் தேவையானதுமாகும்.

இலங்கைச் சிறார்கள் பரீட்சைகளால் அடையும் துன்பங்கள் சொல்லிமாளாதவை. தமது பிள்ளை பரீட்சையில் சித்தியெய்த வேண்டும் என்று கருதும் பெற்றோரால் ஒரு புறமும், தமது பாடசாலையின் சித்திச் சராசரி மேம்பட வேண்டும் என்றெண்ணும் ஆசிரியர் மற்றும் அதிபர்களால் மறுபுறமுமாக ஒரு 'மத்தளம் போன்று' பிள்ளைகள் படும்பாடு பெரும்பாடு. பரீட்சை என்றால் என்னவென்று அறியாத வயதில் திணிக்கப்படும் இந்த 'விஷப்பரீட்சைகள்', பிள்ளையின் உடல், உள ஆரோக்கியத்திலும் நேராகச் செல்வாக்கைச் செலுத்துகின்றன. அவர்களின் உள அமைதியைச் சீர்குலைக்கின்றன. பரீட்சைகள் தவிர்க்க முடியாதவையாக இருந்தாலும், அதை மட்டுமே மையப்படுத்தி ஒட்டு மொத்த கல்விக் கட்டமைப்பையும் மேம்படுத்தியிருக்கும் கலாசாரம் வேருடன் வெட்டி எறியப்பட வேண்டும்.ஸ்கன்டிநேவிய நாடுகளில் இருக்கும் உலகின் மிகச்சிறந்த கல்விக் கட்டமைப்பை இலங்கையால் சடுதியாக ஏற்படுத்த முடியாது. அதற்கு மிகப்பெரும் பொருளாதாரப் பலமும், அடுத்த நூற்றாண்டுக்கான தொழில்நுட்பமும் தேவை. ஆனால், குறைந்தபட்சம் கற்றல் என்ற பெயரில் திணிக்கப்பட்டிருக்கும் 'இயந்திரச் சுமையை' இறக்கிவைக்க முடியும். எனவே, வாக்குறுதிகளை வழங்கிவிட்டு அரசாங்கம் ஓய்ந்துவிடக்கூடாது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## ஆளணிப் பற்றாக்குறையே வழக்குகள் தாமதிக்கக் காரணம்



நீதி அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 26

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளுக்கு இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை அவசியம். இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையால் வழக்குகள் தாமதமாகின்றன என்று நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார சுட்டிக்காட்டியுள்ளார். நாட்டில் கொரோனா நிலவிய சூழ்நிலையில் சிறைக்கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

குறைந்தஅளவில்போதைப்பொருளை வைத்திருந்து கைதுசெய்யப்பட்டவர்களை விடுவிப்பது என்ற கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்பட்டது. அதுவும்கூட இரசாயன பகுப்பாய்வை அடிப்படையாகக்கொண்டே மேற்கொள்ளப்பட்டது. அறிக்கை இல்லாமல் எவரையும் விடுவிக்கமுடியாது. போதைப்பொருள் சட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதில் 10 கிராம் போதைப் பொருளுக்கு அதிகம் என்றால் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது உள்ள பிரச்சினை என்னவென்றால், இரசாயன பகுப்பாய்வுச் சோதனை அறிக்கை கிடைக்கும்வரை எந்த நீதிமன்றம் என்பதைக்கூட தெரிவுசெய்ய முடியாதநிலையே உள்ளது. இரசாயனப் பகுப்பாய்வுப் பிரிவில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிரப்புவதற்கு அந்தப் பிரிவுக்கு மேலும் 32 பேரை நியமிப்பதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் நியமனங்கள் வழங்கப்பட்டு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்-என்றார். (எ-இ)

## ரோஹிதவின் மருமகனுக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 26

புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி என்பவரை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மத்துகம நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது. சட்டவிரோதமாக இறக்குமதிசெய்யப்பட்ட வாகன உதிரிப்பாகங்களை பொருத்திய வாகனம் ஒன்றை சட்டவிரோதமாகப் பதிவுசெய்தமை தொடர்பான விசாரணைகளுக்காக ரோஹித அபேகுணவர்த்தனவின் மருமகனான தனுஷ்க வீரக்கொடி மத்துகம நீதவான் நீதிமன்றில் சரணடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## 219 மருந்தக உரிமங்கள் இரத்து

கொழும்பு, ஜூலை 26

இந்த ஆண்டின் ஜூலை 18 வரையிலான காலப் பகுதியில், நாட்டில் உள்ள 219 மருந்தகங்களின் உரிமங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். சமூக மருந்தக நடைமுறைகளுக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறியதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



### 40 நாடுகளுக்கான
## விசாக் கட்டணங்கள் விரைவில் தள்ளுபடி

கொழும்பு, ஜூலை 26

நாட்டின் சுற்றுலாத்துறையை வளர்க்கும் நோக்கில் மேலும் 40 நாடுகளுக்கான விசா கட்டணங்களைத் தள்ளுபடி செய்ய அரசாங்கம் முடிவுசெய்துள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் அவர் இதனைக் குறிப்பிட்டார். (ச)



## கணினிக் குற்றங்கள் 5,400 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 26

கடந்த 2024ஆம் ஆண்டில் மாத்திரம் கணினிக் குற்றங்கள் தொடர்பாக 5,400க்கும்மேற்பட்ட முறைப்பாடுகள் பதிவுசெய்யப்பட்டதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

பேஸ்புக் மற்றும் வட்ஸ்அப் வழியாகப் பதிவு செய்யப்படும் குற்றங்கள்தொடர்பானமுறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாகவும் அதன் மூத்த பொறியியலாளர்சாருகா தமுனுபொல குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

நாளை

ஞாயிற்றுக்கிழமை- ஆடி 11

27.07.2025

சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம் : 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபை முறைமையை அரசு பலவீனப்படுத்தவில்லை

## அமைச்சர் பிமல் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 26**

**மாகாணசபை முறைமையைப் பலவீனப்படுத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிக்கின்றது எனக் கூறப்படுவது அநீதியான குற்றச்சாட்டாகும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் கூறுகையில்,
9 மாகாணசபைகளுக்கும் கடந்த காலங்களைவிடவும் வீதி அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்களுக்காக மூலதனச் செலவினம் மும்மடங்காக ஒதுக்கப்பட்டுள்ளது. வங்குரோத்தடைந்த நாடே எமக்குக் கிடைக்கப் பெற்றது. நிலைமை அப்படி இருந்தும் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. உள்ளாட்சிசபை மற்றும் மாகாணசபைகளுக்குரிய வீதிகளை வீதி அபிவிருத்தி அதிகாரசபை புனரமைத்தாலும் அவ்வீதிகள் அவற்றின்கீழ் கொண்டுவரப்படுவதில்லை. எனவே, மாகாணசபை முறைமை பலவீனப்படுத்தப்படுகின்றது எனக் கூறப்படுவது அநீதியான குற்றச்சாட்டாகும் - என்றார். (ச-44)



## வில்லூன்றியில் ஆடி அமாவாசை

யாழ்ப்பாணம், ஜூலை 26
ஆடி அமாவாசை விரத நாளான நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்பு அபிஷேகம், பூசை வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் ஊர்வலமாக எழுந்தருளி வில்லூன்றிப் புனித தீர்த்தக்கேணியில் தீர்த்தவாரி இடம்பெற்றது. தொடர்ந்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் தர்ப்பணங்கள் செய்து பிதிர்க்கடன்கள் நிறைவேற்றிக் கொண்டனர். (ச-66)

### போக்குவரத்துக்கு இடையூறு

## தற்காலிக வியாபார நிலையங்கள் யாழ்.பல்கலை முன்பாக அகற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
மக்கள் போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படும் தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றுதல் செயற்றிட்டத் தின் கீழ் முதற்கட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்புறத்தில் நடைபாதையிலுள்ள தற்காலிக வியாபார நிலையங்களை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை நல்லூர்ப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளதாக தவிசாளர் மயூரன் தெரிவித்துள்ளார்.
அதன் பிரகாரம் குறித்த நடைபாதையிலுள்ள தற்காலிக வியாபார நிலையங்கள் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் அகற்றப்படவேண்டும் . அதனைமீறி வியாபாரங்களில் ஈடுபடுகின்றவர்களின் வியாபார நிலையப்பொருள்கள் சபையினால் கையகப்படுத்தப்படும்.
அத்துடன் நடைபாதையில் வாகனங்கள் நிறுத்துவதும் முற்றாகத் தடைசெய்யப்படுகின்றது. குறித்த அறிவித்தலினை மீறி வாகனங்களை நிறுத்துவோர்மீது போக்குவரத்துப் பொலிஸார் ஊடாக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-26,27-66-20)



### நிலத்தடி நீர் பாதுகாப்பு

## நல்லூர்த் திருவிழாவில் கண்காட்சிக்கூடம்

யாழ்ப்பாணம், ஜூலை 26
நிலத்தடி நீர் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வுக்கான கண்காட்சிக்கூடம் இம்முறை நல்லூர் பெருந்திருவிழாவின்போது மக்கள் பார்வைக்காக உருவாக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில், சுவீடன் விவசாய பல்கலைக்கழகத்தின் சூழல் தொடர்பாடலியல் துறை தகைநிலை பேராசிரியர் நடராஜா சிறீஸ்கந்தராஜா இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நல்லூர் பாரதியார் சிலைக்கு அருகில், அரசடி வீதியில் அமைந்துள்ள நெசவுக் கைத்தொழிற்பயிற்சி நிறுவன வளாகத்தில் ஓகஸ்ட் 15 தொடக்கம் 24 வரை இக்கண்காட்சி இடம்பெறவுள்ளது.
"நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி" எனும் கருப்பொருளில் நிலத்தடி நீர் பாதுகாப்பையும் அதன் நிலைத்திருப்பினையும் மக்கள் மத்தியில் குறிப்பாக இளையோர் மத்தியில் திறம்படத்தெரிவிப்பதே இந்தக் கண்காட்சிக் கூடத்தின் நோக்கமாகும். இவற்றில் நிலத்தடி நீரினை அவதானிக்கும் மாதிரி, நீரின் தரத்தைப் பரிசோதிக்கும் மாதிரி, நிலத்தடி நீரினை மீள்நிரப்பும் செயற்பாட்டினை வெளிப்படுத்தும் மாதிரி, போன்றன காட்சிப்படுத்தப்படவுள்ளன.
மேலும் நிலத்தடி நீர் தலைப்புகள் தொடர்பாக நீர் வாண்மையாளர்கள் வழங்கும் குறுகிய காணொலிகள், செயலாற்றுகைகள் பார்வையாளர்களை கண்காட்சிக்கூடத்தில் பங்கேற்க வாய்ப்பளிக்கும் புதிர்கள், போட்டிகள் அமையவுள்ளன - என்றார். (ச-20)



## யாழ். மாநகர முதல்வருடன் நல்லூர்த் தவிசாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராசாவுக்கும் நல்லூர்ப் பிரதேச சபைத் தவிசாளர் ப.மயூரன் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று அண்மையில் மாநகர முதல்வர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போது தத்தமது சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் குறிப்பாக திண்மக்கழிவு முகாமைத்துவச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடினர். (ச-20)

## பிரதேசங்களில் அபிவிருத்தி நிதியொதுக்கீடுகள் போதாது

### வடக்கு ஆளுநரிடம் தவிசாளர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 26
வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய், மாந்தை கிழக்குப் பிரதேசசபைகளின் தவிசாளர்களும், யாழ்ப்பாண மாவட்டத்தின் வலி. கிழக்குப் பிரதேசசபைத் தவிசாளரும் ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.
இதன்போது தமது பிரதேசங்களில் பல்வேறு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் ஒதுக்கப்படும் நிதி போதாது என்று தவிசாளர்கள் குறிப்பிட்டனர்.
சபையின் ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அவசியத்தையும் ஆளுநரிடம் வலியுறுத்தினர். மக்களின் போக்குவரத்துப் பிரச்சினை, கமநலசேவைத் திணைக்களத்தின் சிறிய குளங்கள் கைவிடப்படுகின்ற விடயம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர். சபைத் தவிசாளர்களின் கோரிக்கைகளில் நிறைவேற்றக்கூடியவற்றை விரைவாக நிறைவேற்றித் தருவதாக ஆளுநர் பதிலளித்தார். (ச-[illegible]-66)

## செம்மணிப் புதைகுழியின் நீதிக்கு சர்வதேச விசாரணையே தேவை

### சுரேன் குருசாமி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 26
செம்மணி மனிதப்புதை குழியில் தோண்டத் தோண்ட மனித எச்சங்கள் வெளிவருகின்றநிலையில் சர்வதேச விசாரணை ஒன்றைக் கோருவதன் மூலமே உண்மையை நிலை நாட்டமுடியும் என ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி தெரிவித்துள்ளார்.
யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
1996ஆம் ஆண்டு செம்மணி மனிதப்புதைகுழி தோண்டப்பட்ட நிலையில் 15 மனித எலும்புக்கூடுகள் மட்டுமே இருப்பதாகக் கூறப்பட்டது. தற்போதைய அகழ்வாய்வில் 80 மனித எலும்புக்கூடுகளையும் கடந்துவிட்டன.
ஏற்கனவே செம்மணிப் புதைகுழி வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட இராணுவ அதிகாரி குறித்த பகுதியில் 600 வரையான சடலங்கள் இருப்பதாகச் சாட்சியம் வழங்கியுள்ளார்.
இதன் அடிப்படையில் குறித்த பகுதியில் அகழ்வுப்பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றநிலையில் அதனைக் கண்காணிப்பதற்கு சர்வதேச நிபுணர்களை அழைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
குறித்த புதைகுழி தொடர்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும்- என்றார். (ச-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நேற்று, இன்று, நாளை' அரசியற் கருத்தரங்கு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

கறுப்பு ஜூலைக் கலவரங்களையும், அதில் கொல்லப்பட்ட உறவுகளின் நினவாகவும், 'நேற்று, இன்று, நாளை' என்ற தொனிப்பொருளில் பகிரங்க அரசியற் கருத்தரங்கொன்று இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகாகவுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில், நாளை பிற்பகல் 3 மணியளவில் இந்தக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈ.சரவணபவன், சட்டத்தரணி கலாநிதி கு.குமரகுருபரன், சட்டத்தரணி ப.குகனேஸ்வரன், வடமாகாண முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சமூக அரசியற் செயற்பாட்டாளரான சி.சிவமோகன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் சட்டத்தரணியுமான ந.ஸ்ரீகாந்தா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளார்.

(ம-26)

# தொடர் திருட்டு சிக்கினார் சந்தேகநபர்

யாழ்ப்பாணம், ஜூலை 26

யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் தொடர் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவரை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர். அண்மையில் சாவகச்சேரி நகரில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையம் இரவு வேளை உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலைய போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சந்தேகநபர் கைதானார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர் யாழ்ப்பாணம்,நெல்லியடி, சாவகச்சேரி எனப் பல்வேறு பகுதிகளில் திருட்டில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது. அரியாலைப் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேகநபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்தப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச-28)

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் மோட்டார் வாகன விற்பனை, உதிரிப்பாக விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

தொடர்பு: 077 363 6129, 077 363 6005

(CR 45625) E

## ஆடிப்பூர விழா



(CR/45584) J-1

தேடிவரும் அன்பருக்குக் கோடி வரம் அருளும்
ஆடிப்பூரநாயகி நயினை
ஸ்ரீ நாகபூசணி அம்பிகைக்கு அரோகரா

**அடியார்களே!**

நாளை மறுதினம் 28.07.2025 திங்கட்கிழமை நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அம்பிகைக்கு ஆடிப்பூரவிழா மிகவும் சிறப்புற நிகழ்த திருவருள் பாலித்துள்ளது. காலை விசேட அபிஷேகங்களைத் தொடர்ந்து அம்பிகைக்கு பூரகர்மா (ருது சோபன விழா) நடைபெற்று தீபாராதனைகள் பூசை வழிபாடுகள் இடம் பெறும்.

இத்திருநாளில் அம்பிகையைத்தரிசிக்க வரும் அடி யார்களுக்கு ஸ்ரீநாகபூசணி அமுதசுரபி அன்னதான சபையினர் வழமைபோல அன்னதானம் வழங்க அனைத்து ஒழுங்குகளையும் மேற்கொண்டுள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

-நிர்வாகம்

ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி
அன்னதானசபை, நயினாதீவு - 02

## அனலைதீவு ஐயனார் கோயில் ஆதனம் தொடர்பான அறிவித்தல்

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**
**உப அலுவலகம், அனலைதீவு**
**வட்டாரம்-05, உறுதி இல - 13107/01.02.2025**

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு உப அலுவலகத்திற்குட்பட்ட அனலைதீவு துறைமுக வீதி, அனலைதீவு மேற்கு முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது தலைவர் திரு.அருணாசலம் பரம்சோதி, செயலாளர் திரு.மயில்வாகனம் பிரபாகரன், பொருளாளர் திரு.சந்திரசேகரம் சிவபாலன் என்பவர்களால் அனலைதீவு ஐயனார் ஆலயத்துக்கு சொந்தமான ஆதனமென வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தீவுப்பகுதி அனலைதீவுக் கோவிற்பற்று அனலைதீவு இறை, ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவு, ஊர்காவற்றுறை பிரதேச சபைப் பகுதி அனலைதீவு கிராம அலுவலர் பிரிவு J/38 அமைந்துள்ள "கூழாவடியிறை நயினாகுளம்", எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 58 குளி 12.19ம் உடைய ஆதனமானது 2025.02.01 ஆம் திகதிய 13107 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.K.சிவானந்தன் அவர்களால் 2023.10.04 இல் அளந்து தயாரிக்கப்பட்ட 6041 ஆம் இலக்க வரைபடத் துண்டு lot 1 என குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 58 குளி 12.19 ஆகும்.

அதன் எல்லைகளாக,
கிழக்கு - ஒழுங்கை
வடக்கு - துறைமுக ஒழுங்கை
மேற்கு - ஒழுங்கை
தெற்கு - தம்பையா பரஞ்சோதியின் ஆதனமும் அன்னதான மண்டபமும்

எனவே இவ் ஆதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது அனலைதீவு ஐயனார் ஆலயத்திற்கு சொந்தமான ஆதனமாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இவ் வெளிப்படுத்தலால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் ஊர்காவற்றுறை பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

## நடன அரங்கேற்ற வாழ்த்துக்கள்



திரு.திருமதி
துரைராஜசிங்கம் சுமதி
அவர்களின் மகளும்
எங்கள் செல்ல பேர்த்தி
**ஐஸ்வர்யா**
அவர்களின் பரதநாட்டிய
அரங்கேற்றத்தை முன்னிட்டு
உளமார்ந்த வாழ்த்தும்,
ஆசிகளையும் தெரிவித்து
இந்த சிறப்பு நாளில் சித்தர்கள் வாழ்ந்த
புண்ணிய பூமியாம் சித்தன் கேணியில்
குடிகொண்டிருக்கும் பெரிய வளவு
மகாகணபதிப்பிள்ளையாரையும்,
தில்லைக் கூத்தனாகிய சிவசிதம்
பரமேஸ்வர சிவகாமசுந்தரி
தெய்வங்களின் அருட்கடாட்சம்
நடனத்திலும் வாழ்விலும் வெற்றிபெற
செல்வியை வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
**லிங்கு தாத்தா குடும்பம்**
(லிங்கமயம்)

(CS/58931) J-1

## ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

காரைநகர் பிரதேச சபை : வடக்கு உப அலுவகம் வேம்படி
விண்ணப்பதாரரின் பெயர் : நவரத்தினம் துவாரகன்
ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : பொன்னுத்துரை மாணிக்கம்
ஆதன இல - 361 வீதி - சுற்றுவட்ட வீதி
வட்டாரம் - 10

வட்டாரம் 10 **வீதி** சுற்றுவட்ட வீதி ஆதன இலக்கம் **361** இல் அமைந்துள்ள ஆதனம் உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேச செயலர் பிரிவு J/40 காரைநகர் கிராம அலுவலர் பிரிவு காரைநகர் கோவிற்பற்று காரைநகர் மேற்கு இறை **"ஆலடி"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு 08 குளி 02 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் தமக்கு உரித்தானது என பிரசித்த நொத்தாரிசு **தில்லைநாதன் அருச்சுனா** அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட **823 ஆம்** இலக்க **2020.03.08 ஆம்** திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் நவரத்தினம் துவாரகன் என்பவர் தனது அற்றோனித் தத்துவக்காரர் (சிவநாயகி சுப்பிரமணியம்) மூலம் பொன்னுத்துரை மாணிக்கம் இறக்க ஒரே மகனான எனது தந்தை பொன்னுத்துரை நவரத்தினம் மாதாவழி முதுசம் என்ற அடிப்படையில் உரிமையாளரானார். எனது தந்தை பொன்னுத்துரை நவரத்தினம் இறக்க ஒரே மகனான என்னை பிதாவழி முதுசமாக வந்தடைந்ததாக வெளிப்படுத்தியுள்ளார்.

**ஆதன விபரம்**
கிழக்கு - நல்லையா விஜயலட்சுமியின் ஆதனம்
வடக்கு - தில்லையம்பலம் தில்லைரூபியின் ஆதனம்
மேற்கு - வீதி
தெற்கு - ஒழுங்கை

மேற்குறித்த ஆதனம் நவரத்தினம் துவாரகன் **என்பவருக்கு 823 இல 2020.03.08 திகதிய உறுதி மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.** நில அளவையாளர் எஸ். பாலேந்திரன் என்பவரால் 02.07.2019 ஆம் திகதி 2019/936 இலக்க நில அளவைப்படம் மூலம் துண்டு 1 என சுட்டிக்காட்டியபடி ஆதனம் நிலப்பரப்பு எட்டும் குளி இரண்டும் ஆக காணப்படுகின்றது. நவரத்தினம் துவாரகன் என்பவர் காரைநகர் பிரதேச சபையின் வேம்படி வடக்கு உபஅலுவலகத்தின் ஆதனப்பதிவேடுகளில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் மரியதாஸ் நெவின்ஸ் பெண் மேரிறஜனி என்பவரின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் ஏற்படக்கூடிய எப்பொறுப்பிற்கும் காரைநகர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**பிரதேச சபை,**
**காரைநகர்.**

(CS 58947) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பி.மீதான சொற்போரால் மானிப்பாய் அமர்வில் சலசலப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 26
மானிப்பாய் பிரதேசசபையின் இரண்டாவது அமர்வானது தவிசாளர் ஜெசீதன் தலைமையில் நேற்று ஆரம்பமானபோது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் லே.ரமணன் ஜே.வி.பி. காடைத்தனமான கட்சி என விழித்தார்.

இதன்போது ஜே.வி.பி.யின் விகிதாசார உறுப்பினரான வினோத் தனு எழுந்து குறித்த வார்த்தைப் பிரயோகத்துக்கு எதிராகக் கூச்சலிட்டுச் சண்டையிட்டார். அதனையடுத்து சபையில் அமைதியின்மை ஏற்பட்டது. பலத்த முயற்சிக்கு பின்னர் தவிசாளர் சபையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். (ச-27)

# தமிழக மீனவர்கள் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜுலை 26
கடந்த 13ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட தமிழகம் இராமேஸ்வரம் மீனவர்கள் 7 பேரையும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ். ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதேவேளை இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 25 படகுகளுடன் 185 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-35-27)

## Chundikuli Girls' College, Jaffna.

**VACANCIES**

Applications are invited from suitable candidates for the below vacancies.

1. **Teacher of Carnatic Music**
2. **Hostel Matron**
3. **Lab Assistant**

Apply before 7th **August 2025** with the names of two non related referees.
Only short listed candidates will be called for an interview.

The Principal

Postal Address: 6, Colombogam road, Chundikuli, Jaffna.

Email: forwardcgc@yahoo.com

## பெயர் மாற்றம்

இல-17/31 பண்டாரக்குளம் ஒழுங்கை நல்லூர் வடக்கு யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சாந்தலிங்கம் சார்ந்தரூபி ஆகிய நான் எனது பெயரை சாந்தலிங்கம் சாந்தசிவரூபி என மாற்றம் செய்கின்றேன்.

**சாந்தலிங்கம் சாந்தசிவரூபி**

## காணி விற்பனைக்கு

மிருசுவில்

**A9 கண்டி வீதிக்கு அருகாமையில் காணி விற்பனைக்கு உண்டு. வாங்க ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்**

Whatsapp / Viber +33770012099

## விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட
**Royal Enfield Model 350 Bullet (Black with gold stripe) 350 Classic**
**Metallic Silver Motorcycle For Sale**

தொடர்புகளுக்கு:
**076 708 6556**

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது)

## கூறுவிலை கோரல்

சங்கத்தின் எரிபொருள் நிலையம் அமைந்துள்ள வளாகத்தில் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான கூறுவிலை ஒப்பந்தகாரரிடம் இருந்து கோரப்படுகின்றது.

வேலையின் விபரம் அடங்கிய விண்ணப்பத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 250.00 செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை மூடிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"தண்ணீர் தாங்கி அமைப்பதற்கான கூறுவிலை"** எனக் குறிப்பட்டு **"தலைவர், யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வது), இல.127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு 2025.08.11 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.


**விண்ணப்பமுடிவுத் திகதி :- 08.08.2025**

**மு.ஜெ.சுஜீந்திரன்,**
**தலைவர்,**
**யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது**

(CR 45627) A

## மரண அறிவித்தல்

மலர்வு 13 . 04 . 1942



உதிர்வு 23 . 07 . 2025

### கதிரவேலு இலட்சுமி

கைதடி தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இலட்சுமி அவர்கள் 23.07.2025 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலை - ஆனந்தி தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குஞ்சியின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான நன்னி - பொன்னி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவரான நன்னி கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும் கந்தசாமி (கனடா), ஜெயந்தி, வசந்தி, ரவீந்திரன் (லண்டன்), சுகந்தி (லண்டன்), கோபிராஜ் (லண்டன்), ஜீவதாஸ் (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான குகேந்திரன், இராசேந்திரன், சுகிர்தா ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, தர்மலிங்கம், தெய்வேந்திரன், சனிக்கா, கிருபாகரன், குமுதினி, நிஷாளினி, சிவபாக்கியம், இராசம்மா, காலஞ்சென்ற குஞ்சி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சூரியன், சந்திரன் மற்றும் நாகராசா, மணி, கணேசன், நவரத்தினம், சின்னம்மா, பரமேஸ்வரி, தவமணி, மல்லிகாதேவி, செல்வமலர் ஆகியோரின் அன்புச்சகோதரியும், பாறி, கிளி, தம்பியையா, சரோ, திருச்செல்வம், பஞ்சலிங்கம், பூமணி, பரமசாமி, பாக்கியம், சுந்தரலிங்கம், அரியமலர், செல்வராணி, சந்திரலிங்கம், காலஞ்சென்றவர்களான பொன்னன், இராசபூபதி, மணியம், வேலுப்பிள்ளை, மகாலிங்கம், தவம், அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பகிந்தன், மோகனதீபா, நிலக்ஷன், நிந்துஜா, மிதுனா, ஷாரங்கா, ரஷ்மி, சுஜாங்கி, அபிலாஷன், வர்ஷனா, அமானா, ஆரணிகா, கம்சிகன், கஸ்வின், அவந்திகா ஆகியோரின் பேத்தியும், வினுஷாந், அகிரா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
**074 298 4238**

தகவல் :
குடும்பத்தினர்

(CS 58950) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 10 . 1948



மறைவு 23 . 07 . 2025

### நடராசா இராமநாதன்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், நாவற்குழிச் சந்தியியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராமநாதன் அவர்கள் கடந்த (23.07.2025) புதன்கிழமை அதிகாலை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இலட்சுமி அம்மாள் (பாப்பம்மாள்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஜெயராமன் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், விமலாதேவி (சமூக சேவையாளர் - நாவற்குழி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சரோசா மற்றும் சகுந்தலா (சிவன் கோயில் தெரு, புஷ்பவனம், இந்தியா) அவர்களின் பாசமிகு சகோதரனும், தேவராசா, காலஞ்சென்ற நடனராசா மற்றும் சிங்கராசா (ஓய்வூதியர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), தங்கராசா (போதகர் மதன் - இந்தியா), தருமராசா (ஓய்வூதியர் - நீர்ப்பாசனத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), கமலராஜன் (சுவிஸ்), காலஞ்சென்ற காசிநாதன் (கந்தன்) மற்றும் கண்ணையன் (நாலுவேதபதி, புஷ்பவனம், இந்தியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், யசோதா (லண்டன்), மணிவண்ணன் (பிரான்ஸ்), சாந்தினி, யோகேஸ்வரன் (பிரதேசசபை - உப தவிசாளர் - சாவகச்சேரி), மணிமாறன் (ஜேர்மன்), மணிபல்லவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், றிச்சர்ட் தேவரஞ்சன் (லண்டன்), சங்கரன், சாராஆனந்தி (ஆசிரியர் - ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை - மானிப்பாய்), உஷாந்தினி (ஜேர்மன்), நிறோஜினி (பிரான்ஸ்) மற்றும் பத்மாவதி, திலகவதி, கந்தசாமி (நாலுவேதபதி - இந்தியா), லதா, குமார், சங்கர் (புஷ்பவனம் - இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தலிஷா, றியாஸ், றியானா, ஜெமிரா, ஜெர்ஷன், சஜோ சாமுவேல் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நித்திய இளைப்பாற்றுக்கான இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (27.07.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 02:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கைதடி ஊரியான் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாவற்குழிச் சந்தி,**
**எரிபொருள் நிரப்பு**
**நிலையத்திற்கு முன்பாக**

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 082 8830**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்றத்தில் சிக்கவைக்கவே இராணுவத்தினர்மீது வீண்பழி

### உதயகம்மன்பில கண்டுபிடிப்பு



இலங்கைப் படையினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை நியாயப்படுத்தும் விதத்திலேயே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தை இராணுவத்துடன் தொடர்புபடுத்தும் சர்வதேச சூழ்ச்சி இடம்பெறுகின்றது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ள நிலந்த ஜயவர்தனவுக்காக அல்ல, உண்மை மற்றும் நீதிக்காகவே நான் குரல் கொடுக்கின்றேன். இலங்கை வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் தாக்குதல் சம்பவம் தொடர்பில் அனைத்துத் தகவல்களையும் முன்கூட்டியே புலனாய்வாளர்கள் கண்டுபிடித்து வழங்கி இருந்தனர். இப்படியான புலனாய்வாளர்கள் தண்டிக்கப்பட்டால், இதன் பிறகு ஆயிரம் குண்டுகள் வெடித்தாலும் தகவல்களை வெளியிட புலனாய்வாளர்கள் முன்வரமாட்டார்கள்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மாயையை உருவாக்கி, இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனப் புலிகளால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை நியாயப்படுத்தும் உள்நோக்கத்தின் அடிப்படையிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்தை இராணுவம்மீது சுமத்துவற்கு சர்வதேச சூழ்ச்சி உள்ளது. மேற்குலக நாடுகள் மற்றும் பிரிவினைவாத சக்திகளே இந்த சூழ்ச்சியின் பின்னால் உள்ளன. இந்தச் சக்திகளின் உள்ளக முகவர்கள் சிலர், இராணுவத்தினர்மீது குற்றஞ்சுமத்தி டொலரைப் பெறுவதற்காக காட்டிக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் - என்றார். (எ-இ)

# பிரான்ஸில் உருவாகவுள்ள அன்ரன் பாலசிங்கத்தின் சிலை

### தடுக்கவேண்டும் என்று பதறும் ஜகத் டயஸ்

**கொழும்பு, ஜூலை 26**

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் சிலையை நிறுவுவதற்கு பிரான்ஸ் தலைநகரில் முன்னெடுக்கப் படும் நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பிரான்ஸ் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வேண்டும் என்று முன்னாள் இராணுவ அதிகாரி லெப் ஜெனரல் ஜகத் டயஸ் கோரியுள்ளார்.**

புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் விதத்திலான பிரான்ஸின் செயற்பாடுகளை இலங்கை கடுமையாக எதிர்க்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையிலும் இந்தியாவிலும் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் இருந்து பிரிட்டிஷ் பிரஜையான பாலசிங்கத்தின் நடவடிக்கைகளைப் பிரித்து பார்க்கமுடியாது, மன்னிக்க முடியாது. இலங்கையில் இனப்படுகொலை நடைபெற்றது என்று தெரிவித்து முன்னாள் ஜனாதிபதிகள் இருவருக்கு கனடா பயணத்தடை விதித்துள்ள பின்னணியிலேயே, பிரான்ஸில் அன்ரன் பாலசிங்கத்துக்கு சிலை நிறுவும் நடவடிக்கைகளையும் நோக்கவேண்டும். அவர்கள் விடுதலைப்புலிகளைப் பரிசுத்தமானவர்களாக பகல், இரவாகச் செயற்படுகின்றனர். நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் கொடிகளை ஏற்றுவதும், அவர்களின் சிலைகளை நிறுவுவதும் இந்த மூலோபாயத்தின் ஒரு பகுதியே. வெளிநாட்டு அரசியற் கட்சிகளின் ஆதரவுடன் தமிழ் புலம்பெயர்ந்தோர் தங்கள் பிரிவினைவாதத் திட்டத்தைச் சிறந்தமுறையில் முன்னெடுத்துவருகின்றனர். ஆனால் அந்தச் சவாலை எதிர்கொள்வதில் எமது நாடாளுமன்றம் முற்றிலும் அலட்சியமாக உள்ளது.

பிரான்ஸில் சிலை அமைக்கப்படவுள்ளமை தொடர்பில் எமது தூதரகம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும். சிலை நிறுவும் திட்டம் இடம்பெறுகின்றபோதும் அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ இதுவரை அது தொடர்பில் வாய் திறக்கவில்லை - என்றார். (எ-இ)

## உரம் விலை உயர்வு


கொழும்பு, ஜூலை 26

உலக சந்தையில் உர விலைகள் அதிகரித்துவரும் நிலையில், உள்நாட்டிலும் உர விலைகளும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள மாவட்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின்போது விவசாய அமைச்சர் கே.டி. லால்காந்த் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவான பிரச்சினையைத் தாண்டி, சலுகை விலையில் உரங்களை வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம்
29 . 09 . 1932



மறைவு
20 . 07 . 2025

**திருமதி தங்கமணி அம்பலம்**
(இளைப்பாறிய ஆசிரியை-யாழ்/நெ/ம/வித்தியாலயம், யாழ்/நெ/பா/வித்தியாலயம், யாழ்/இந்து ஆரம்பப் பாடசாலை)

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், கனடா Pickering ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தங்கமணி அம்பலம் அவர்கள் கடந்த (20-07-2025) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகேந்திரர்-இராமாசிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-அன்னப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை அம்பலம்(JP, முன்னாள் Chairman) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அமிர்தம், குமாரசாமி, இராசமணி மற்றும் மருதலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் ஜெயந்தி (இலங்கை), நேமிநாதன் (கண்ணன்-ஜேர்மனி), நந்தினி (கனடா), சிவானந்தன் (பாபு-லண்டன்), சத்யவாணி (சத்யா-கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், குமுதா மற்றும் யாழினி (லண்டன்), குணபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷா, தயேந்திரா, ராகேந்திரா, ஜோபிகா, யாதவி, சச்சின், மிதுஷா, சுஜாதா, பிருந்தா, சுபாஸ்கரன், கில்மி ஆகியோரின் அன்புப் பேத்தியும், அனுஷன், டினுஷன், சந்தோஷ், மேயா, லக்சிகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்காக: Get Direction, Saturday, 26 Jul 2025, 5:00 PM - 9:00 PM, Sunday, 27 Jul 2025 7:00 AM - 8:00 AM -Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வைக்கப்பட்டு கிரியைகள் Sunday, 27 Jul 2025 8:00 AM -9.30AM, Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வில் நடைபெற்று, Sunday, 27 Jul 2025, 10:00 AM - 10:30 AM, Get Direction, North Toronto Crematorium, 2 Stalwart Industrial Dr,Gormley, ON L0H 1G0, Canada வில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
நந்தினி-மகள்: +141 677 14022
சிவானந்தன்-மகன்: +44 7830 191745
கண்ணன்-மகன்: +491 787 252359
சத்யா-மகள்: +164 780 83529
ஜெயந்தி-மகள்: +94 776 692491

தகவல்:
குடும்பத்தினர்



## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
30 . 09 . 2011



ஆண்டவன் அடியில்
26 . 07 . 2020

**அமரர் பிரதீபன் தஸ்விகன்**

ஆராரோ சொன்ன அன்னை ஐயோ ! எனக்குஉற
அள்ளி அணைத்த அப்பா தம்பி ! எனக்கதற
கதறல்கள் குளறல்கள் காதருகில் நின்றிருந்தும்
கண் திறந்து ஒரு நிமிடம் எமை பார்க்காமல் போனதேனோ

ஓடிவிளையாடிய முற்றம் உண்டு அதில்
உன்னோடு மகிழ்ந்திருந்த சுற்றம் உண்டு
ஆயிரமாய் எம்மனதில் பற்றும் உண்டு இருந்தும்
அள்ளி அணைக்கப்பாலன் உனை ஐந்தாண்டாய் தேடுகின்றோம்

கருமை நிற கண்ணன் எங்கள் கார்மேக வண்ணன் உனை
காலன் வந்து கேட்டவுடன் செல்லாமல் போய்விட்டாய் இனி
கைலாயம் சேர்ந்து நீயும் கதிகள் யாவும் பெற்றிடவே
கைலாய நாதன் அவன் பாதம் தினம் வேண்டுகின்றோம்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

(CS/3686) D*

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக...

களில் கஜேந்திரகுமார் ஈடுபடக்கூடாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

செம்மணிப் புதைகுழியின் விசாரணைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அனுப்பிய கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் கடுமையாக விமர்சித் திருந்தார். இது தொடர்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சி.வீ.கே.சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அகழ்வுகள் தொடர்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது. அகழ்வுப் பணிகளுக்குத் தேவையான அனுசரணைக்கும் உதவிகளுக்கும் இலங்கை அரசாங்கம் எந்தப் பின்னடைவையும் கொடுக்கக்கூடாது என்றே கூறப்பட்டுள்ளது. அது அரசாங்கத்தின் கடமை. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களைச் சேர்க்கவேண்டும் என்பதை நாங்கள் கூடுதலாக வலியுறுத்தினோம். அகழ்வு இலங்கையில் நடப்பதால் அதை இலங்கையிடம் வலியுறுத்தினோம்.

நாம் உள்ளக விசாரணையை எந்தவொரு இடத்திலும் கேட்கவில்லை. அது மட்டும் அல்லாமல், போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் இனப்படுகொலை தொடர்பாகவும் நாங்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளோம். சர்வதேச விசாரணை வேண்டாம் என்றோ, உள்ளக விசாரணையில் திருப்திப்படு கிறோம் என்றோ நாம் எழுதிய கடிதத்தில் எந்தச் சொல்லும் கிடையாது. எனக்கும் சுமந்திரனுக்கும் நன்றாக ஆங்கிலம் தெரியும். எனவே, கஜேந்திரகுமார் அல்லது வேறுயாரும் சொல்வதைத்தான் செய்வோம் என எவராவது எதிர்பார்த்தால் அது நடக்காது. நாங்கள் சுயாதீனமாக இயங்குவோம். எங்கள் கட்சி சுயாதீனமாக இயங்கும்.

கஜேந்திரகுமார் தொடர்ச்சியாக விதண்டாவாதம் புரிந்துகொண்டிருக்கின்றார். அவர் ஏன் இவ்வாறு செயற்படுகின்றார் என்பது எனக்கு தெரியவில்லை. நாம் எழுதிய கடிதம் வெளிப்படையாக ஊடகங்களில் வெளியாகியிருக்கிறது. உள்ளக விசாரணை கேட்டிருக்கிறோமா என்பதை ஊடகங்களும் மக்களும் தீர்மானிக்கட்டும். மக்கள் எங்களுக்கு ஆணை தந்துள்ளனர். 377 உள்ளூராட்சி உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். 34 உள்ளூராட்சி சபைகள் கிடைத்திருக்கின்றன - என்றார். (அ-ம-26)

## 2 என்புத்...

தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி மீதான இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளின் இருபதாம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, மேலும் இரண்டு என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் ஒட்டுமொத்த எண்ணிக்கை 90ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், மீட்கப்பட்ட என்புத் தொகுதிகளின் எண்ணிக்கை 81ஆக அதிகரித்துள்ளது. நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன், சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட மற்றும் கலைப்பீட தொல்லியற்துறை மாணவர்கள் ஆகியோர் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## முறைப்படி...

மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. இரண்டாவது அகழ்வுத் தளத்தில் சட்ரீதியாக உடற்கூற்று பரிசோதனை செய்யப்பட்டு அடக்கம் செய்யப்பட்ட சடலம் ஒன்று நேற்றையதினம் அடையாளம் காணப்பட்டது. இதையடுத்து அந்த உடற் தொகுதி உடனடியாக மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது. (அ-ம-26)

## தென்னக்கோன்...

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)


**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்**
**தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான**
**கேள்வி கோரல் - 2025/ 2026**

1. நல்லூர் பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை சுகாதார அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களிற்கு 01.09.2025 தொடக்கம் 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு சுத்திகரிப்பு சேவையினை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி : 2025.07.28 - 2025.08.11 நண்பகல் 15.00 மணிவரை
   கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 2025.08.12 மு.ப 10.00 மணி வரை
   கேள்வி திறக்கும் திகதி : 2025.08.03 மு.ப 10.05 மணி
2. கேள்வி கோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. எம்மால் குறிப்பிடப்பட்ட கேள்வித்தொகையிலும் கூடிய கேள்வித்தொகையினை கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
4. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
5. கேள்விதாரர் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்த நிலையான தொலைபேசி தொடர்பிலக்கத்துடன் கூடிய ஒரு பதிவுக் காரியாலயத்தையோ அல்லது கிளைக் காரியாலயத்தையோ கொண்டிருத்தல் வேண்டும். அவசியமேற்படுமிடத்து குறித்த முகவரி நேரில் பரிசீலிக்கப்படும். மேலும் சேவை வழங்குநர் தெரிவில் இவ்விடயம் முக்கியமாக கருத்திற்கொள்ள
6. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 2,000.00 இனையும், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக ரூபா 25,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் மூலம் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
7. தெரிவு செய்யப்படும் நிறுவனம் செயலாற்றுகை பிணை முறியாக ரூபா 50,000/= ஐ செலுத்தி ஒப்பந்தமொன்றை செய்து கொள்ள வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி இணைப்பிரதி ஆகியவற்றை தனித்தனி தபால் உறைகளில் இட்டு, தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிட்டு இரு கடித உறைகளையும் ஒரு கடித உறையினுள் இட்டு அக் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, கொக்குவில் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.) அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய திகதியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
9. கேள்வி திறக்கப்படும் போது கேள்வியாளரோ அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
10. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் நிறைவடைந்ததனை தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
11. இக்கேள்வி கோரல் தொடர்பாக நல்லூர் பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
12. மேலதிக நிபந்தனைகள் மற்றும் நடைமுறைகள் கேள்விப்படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதுடன் மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் நேரடியாகவோ 021 222 2700 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.


| இல | சுத்திகரிப்பு சேவை மேற்கொள்ள வேண்டிய இடங்கள் | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஆகக் குறைந்த ஆளணி | நாளொன்றில் துப்பரவு பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கட்டாய நேரம் | ஆகக்கூடிய கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி பொதுச்சந்தையும் மலசலகூட தொகுதிகளும் அதனை அண்டியுள்ள சுற்றுத் தொகுதிகளும். | 03 | காலை 5.30 மணி தொடக்கம் மாலை 1.30 மணி வரை | 8,000,000.00 |
| | | 05 | மாலை 2.30 மணி தொடக்கம் இரவு 09.30 மணி வரை | |

தவிசாளர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,
நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.
2025.07.26



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18
07
1948



மறைவு
06
08
2024

## அமரர். சின்னத்துரை நிர்மலேந்திரன்

அப்பா நினைவில்
ஒரு வருடம் கடந்துவிட்டது.
ஆனால் உங்கள் சுவாசம் இங்கேயே.
ஒவ்வொரு மௌனத்திலும்,
உங்கள் குரல் தேடுகின்றோம்.
நீங்கள் இல்லை என்பதே உண்மை.
ஆனால் உங்கள் நினைவுகள் வாழ்த்துகின்றன.
நாம் இன்னும் குழந்தைகள் தான்.
உங்கள் தேசத்தில் தஞ்சம் தேடுகின்றோம்.
நேரம் நகர்ந்தாலும்,
உங்கள் பாசம் எம்முள் நின்றுவிட்டது.
இது ஒரு இல்லாத பிரிவு இல்லை.
இது என்றும் தொடரும் பாசம்.

அன்புடன்,
என்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோய்னுடன்...

100 மில்லிகிராம் ஹெரோய்னை உடமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட இளைஞர் 21 வயதுடையவர். அவர் முதற்கட்ட விசாரணைகளுக்குப் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவரை பொலிஸ் காவலில் வைத்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-28)

## தவறான...

துள்ளார். அளவுக்கு அதிகமான போதையிலேயே அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## 16 தமிழ்...

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். பார்த்தீபன், தூயவன், சாள்ஸ், சுயந்தன், மனோகரன், உதயசிவம், வசந்தன், ஈழவேந்தன், உமாசுதன், இன்பராஜ், யுவன், சுதாகரன், சீலன், அழகசிங்கம், இந்திரராஜா, சர்மா ஆகியவர்களே இவ்வாறு நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டனர்.
தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பை விருத்தி செய்தல், அதன் கொள்கைகளை ஊக்கப்படுத்துதல், அந்த அமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குதல், அந்த அமைப்புக்கு உடந்தையாய் இருந்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டிருந்தனர். கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள், இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கைகள், சட்டமருத்துவ அறிக்கைகள் ஆகியவற்றுடன், 58 சாட்சியங்களையும் உள்ளடக்கிய குற்றப் பத்திரத்தை 2022ஆம் ஆண்டு சட்டமா அதிபர் தாக்கல் செய்திருந்தார்.
2020ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்ட அவர்களுக்கு 2022ஆம் ஆண்டு பிணை வழங்கப்பட்டிருந்தது. மேற்குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னராக, குற்றச்சாட்டுப் பத்திரத்துக்கு எதிராக சட்டரீதியான பூர்வாங்க ஆட்சேபனைகள் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டன.
குற்றப் பத்திரிகையில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்டது எனவும், குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் வடக்கு மாகாணம் அல்லது கிழக்கு மாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள மேல் நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர். இதற்கு மேலதிகமாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் இந்தக் கைது நடவடிக்கைகள் முறைப்படி முன்னெடுக்கப்படவில்லை என்றும் சட்டத்தரணிகள் சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.
சட்டத்தரணிகள் பூர்வாங்க ஆட்சேபனைகளில் திருப்தியடைந்த நீதிமன்றம், விசாரணைகளை ஆரம்பிக்க முன்னரேயே குற்றஞ்சாட்டப்பட்ட 16 தமிழ் இளைஞர்களையும் விடுதலை செய்தது.
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பில் சட்டத்தரணிகள் கே.எஸ். இரத்தினவேல், ரணித்தா ஞானராஜா, சுரங்க பண்டார, சுவஸ்திக்கா ரவிச்சந்திரன், கேதினி பாக்கியராசா மற்றும் வொஷான் ஹேரத் ஆகியவர்கள் மன்றில் முன்னிலையானார்கள். (அ-ம-26)

## செம்மணிப்...

செம்மணிப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் இடம்பெறும் பகுதிக்கு மேலதிகமாக, செய்மதிப் படங்களை அடிப்படையாக வைத்து துறைசார் நிபுணர் சோமதேவா அடையாளப்படுத்திய இடத்திலும் என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன. இதையடுத்து, செம்மணியில் குறிக்கப்பட்ட பகுதிக்குள் மட்டும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்காமல், பரந்துபட்ட அகழ்வுகள் இடம்பெறவேண்டும் என்று உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வலியுறுத்தல்கள் முன்வைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்தே, வெளிநாட்டில் இருந்து ஜி.பி.ஆர். ஸ்கான் இயந்திரம் கொண்டுவரப்பட்டு அங்கு விரிவான ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப் புதைகுழிகளை ஆய்வு செய்வதற்கு இலங்கையில் இதுவரை ஏ.எம்.ரி. ஸ்கானரே பயன்படுத்தப்பட்டன. இந்த நிலையில், தரையை ஊடுருவும் ராடர் (ஜி.பி.ஆர்.) என்று அழைக்கப்படும் ஸ்கானர் மூலம் இலங்கையின் மனிதப் புதைகுழியொன்று ஆய்வு செய்யப்படும் முதலாவது சந்தர்ப்பமாக செம்மணிப் புதைகுழியே பதிவாகவுள்ளது.
தரையை ஊடுருவும் ராடர் (ஜி.பி.ஆர்.) அமைப்பு, கொங்கிரீட்களையும் ஊடுருவி நிலத்துக்குக் கீழ் இருக்கும் விடயங்களை திரையில் வெளிப்படுத்தும் நவீனத்துவம் கொண்டது. கனடா போன்ற நாடுகளில் கட்டடங்களின் கீழ் இருந்த மனிதப் புதைகுழிகளை அவதானிப்பதற்கு இந்த ஸ்கானரே பயன்படுத்தப்பட்டது.
ஆய்வுப் பணிகளுக்காக செம்மணிப் புதைகுழிக்கு அருகாக உள்ள பல பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. இந்த ஸ்கான் ஆய்வில் பல பகுதிகளில் என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகின்றது. பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டதும், இந்த ஆய்வு இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## ஐந்தாம்...

என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் இருந்து மீளெழுச்சி பெறுவதற்காக, நாணய நிதியத்தின் உதவியை இலங்கை நாடியிருந்த நிலையில், இதுவரை நான்கு கட்டமாக கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஐந்தாம்கட்ட கடனுதவிக்கான பணிகளே எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளன.
(அ-ம-44)

## பொலிஸ்...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். குடும்பப் பிணக்குத் தொடர்பில், அவருடைய குடும்பத்தினரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அந்த நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.
விசாரணைகளுக்காக பொலிஸாரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், தனது சாரத்தைப் பயன்படுத்தி அவர் தூக்கிட்டு உயிரைமாய்த்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
குடும்பத்தினர் தனக்கு எதிராக முறைப்பாடு வழங்கியதைத் தொடர்ந்து ஏற்பட்ட விரக்தியாலேயே அவர் உயிரிழந்திருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் கூறியுள்ளனர்.
ஏனைய பொலிஸ் நிலையங்களில் உள்ள சிறைக்கூடங்களுக்கும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் உள்ள சிறைக்கூடத்துக்கும் இடையில் பெரியளவு வேறுபாடு காணப்படுகின்றது. கிளிநொச்சி பொலிஸ் நிலைய சிறைக்கூடம் மூன்று பிரிவுகளாகக் காணப்படுகின்றது. மூன்றாவது சிறைக்கூடத்தின் கணிசமான பகுதிகள் சிமெந்துக் கட்டுக்களால் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த சிறைக்கூடத்துக்குள்ளேயே உயிரிழந்த நபரும் அடைக்கப்பட்டிருந்தார். அதற்குள் அடைக்கப்பட்ட நபரை, அந்தச் சிறைக்கூடத்தின் அருகில் சென்று மாத்திரமே கண்காணிக்க முடியும். எனவே, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியே அவர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.
பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள கைதியொருவரைப் பாதுகாக்க வேண்டியமை பொலிஸாரின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். எனவே, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டகைதியொருவர்சிறைக்கூடத்துக்குள் தவறான முடிவெடுத்து உயிரிழந்த விடயம் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்தவரின் உறவினர்களும் பொலிஸ் நிலையத்துக்குச் சென்றதைத் தொடர்ந்து அங்கு பதற்றம் ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-113-28-26)

## எந்தத்...

தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எம்மால் முன்னெடுக்கப்படும் விசாரணையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏற்கின்றனரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினையில்லை. ஏற்பதற்கும், நிராகரிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உள்ளது. அந்த உரிமையை நாம் மதிக்கின்றோம். எனினும், சம்பவம் தொடர்பில் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும். எந்தத் தடைகள் வந்தாலும் விசாரணைகள் தொடரும் - என்றார். (அ-ம-44)

## புதிய...

ஹரிணி தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசியலமைப்பென்பது நாட்டின் அடிப்படைச் சட்டம். எனவே, உரிய ஆய்வு, கண்காணிப்பு மற்றும் பல்வேறு தரப்பினருடைய கருத்துக்கள் என்பவற்றை உள்வாங்கியே இந்தப் பணிகளை முன்னெடுக்கமுடியும்.
புதிய அரசாங்கம் ஆட்சிக்குவந்த பின்னர் புதிதாக 8 சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. மேலும் சில சட்டங்கள், சட்டவரைவுகளாக உள்ளன. உடனடியாகத் தீர்வை வழங்கக்கூடிய துறைகள் தொடர்பில் அவதானம் செலுத்தியே இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே, எமது ஆட்சிகாலத்துக்குள் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குரிய ஆரம்பக்கட்ட நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்றுவோம் - என்றார். (அ-ம-44)

## நல்லூரில்...

முக்கியமான அம்சமாக நேற்று மாலை 4 மணியளவில் சிறைகளில் கொல்லப்பட்டோருக்கான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 2009 ஆம் ஆண்டு சிறிலங்கா அரசபடைத் தரப்புகளால் கைதுசெய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டு சிறைக்குள் படுகொலை செய்யப்பட்ட மரியதாஸ் டேவிட் டில்றொக்சனின் தந்தையார் கிறிஸ்தோபர் மரியதாஸ் டேவிட் பொது ஈகச் சுடரேற்றி அஞ்சலித்தார். அதனைத் தொடர்ந்து இலங்கைச் சிறைகளில் படுகொலை செய்யப்பட்ட பதினொரு தமிழ் அரசியல் கைதிகள் நினைவாக பதினொரு விடுதலைச் சுடர்கள் சிறார்களால் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.
தொடர்ந்து விடுதலைக் கவனவீர்ப்புப் போராட்டத்தின் பிரகடனம் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகனால் வாசிக்கப்பட்டது.
அதனைத் தொடர்ந்து விடுதலை நீர் சேகரிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு - கிழக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்டங்களிலும் ஏற்கனவே விடுதலை நீர் சேகரிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்து எடுத்துவரப்பட்ட விடுதலை நீர் ஒன்றாகக் கலக்கப்பட்டது. அத்துடன் யாழ்.மாவட்டத்தின் தீவகப் பகுதிகளிலிருந்து எடுத்து வரப்பட்ட விடுதலை நீரும் ஒன்றாகக் கலக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் நேற்றைய விடுதலை நீர் சேகரிப்பில் இணைந்துகொண்டனர்.
(அ-ம-26-66)

## வடக்கு,...

ஒப்படைக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.
எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி செலயகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பணியை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது. மக்கள் பிரதிநிதிகளின் வேலையை அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்க முடியாது. மாகாணங்களில் மக்களின் பிரதிநிதித்துவம் அவசியம்.
உள்ளூராட்சித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து, மாகாணசபைத் தேர்தலைப் பிற்போட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்று நாங்கள் சந்தேகிக்கின்றோம். எனவே, பல்வேறு விதமான கருத்துகளை மாறிமாறி கூறிக்கொண்டிருக்காமல், மாகாணசபைத் தேர்தல் தொடர்பான உறுதியான முடிவை அரசாங்கம் அறிவிக்கவேண்டும் - என்றார்.
(அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிவுமறைவிலேயே புதிய அரசியலமைப்பு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 26

புதிய அரசியலமைப்பு தொடர்பில் இதுவரையில் வெளிப்படையாக எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. புதிய அரசியலமைப்பை இயற்றும் நடவடிக்கைக்கு அரசாங்கம் முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் கூறுகையில்,

புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய கால எல்லை பற்றி பிரதமர் தெளிவாகக் குறிப்பிடவில்லை. பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தில் இதற்குரிய பணி இரகசியமாக இடம்பெறுகின்றதா எனவும் தெரியவில்லை.

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து விரைவில் ஒரு வருடமாகப்போகின்றது. எனினும், புதிய அரசியலமைப்புப் பற்றி இற்றைவரை வெளிப்படையாக எதுவும் நடக்கவில்லை. மக்களின் கருத்துகள் கோரப்படவில்லை. நிபுணர்களின் யோசனை உள்வாங்கப்படவில்லை. நாடாளுமன்றத்தின் பங்களிப்பும் பெறப்படவில்லை. எனவே, புதிய அரசியலமைப்புக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்குமாறு கோருகின்றேன்- என்றார். (ச-44)



இனவழிப்புக்கு எதிர்ப்பு

## மானிப்பாய் அமர்வில் உறுப்பினர் வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 26

தமிழர்கள்மீது கட்டவிழ்க்கப்பட்ட கறுப்பு ஜூலை இனவழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து மானிப்பாய் பிரதேசசபையின் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் லோகப்பிரகாசம் ரமணன் அமர்விலிருந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

மானிப்பாய் பிரதேசசபையின் இரண்டாவது அமர்வு நேற்று வெள்ளிக்கிழமை தவிசாளர் ஜெசீதன் தலைமையில் ஆரம்பமானது.

இதன்போதே அரசு இயந்திரம் சரியாகச் செயற்பட மறுக்கிறது. 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜூலை கலவரத்துக்குத் தீர்வு இதுவரை வழங்கப்பட்டதா? இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு, இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நான் இந்த சபையை விட்டு ஐந்து நிமிடங்கள் வெளிநடப்புச் செய்கின்றேன். இந்த இன அழிப்பு நடைபெற்றது உண்மையே, எனக்கருதுபவர்கள் என்னுடன் இணைந்து ஐந்து நிமிடங்கள் வெளி நடப்பு செய்யுங்கள் எனக் கூறிவிட்டு எழுந்துசென்றார். அவருடன் இணைந்து உப தவிசாளரும் வெளிநடப்புச் செய்தார்.

அதேவேளை தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உறுப்பினர்கள், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள், தமிழ் மக்கள் கூட்டணியின் உறுப்பினர்கள் எவரும் இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளிநடப்பு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)

## கிணற்றில் வீழ்ந்த யானைகள் ஒன்று சாவு; மற்றையது மீட்பு

வவுனியா வடக்கு கரப்புக்குத்திப் பகுதியில் இரண்டு யானைகள் கிணற்றில் தவறி வீழ்ந்தநிலையில் ஒரு யானை உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. மற்றைய யானை பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக கிராமசேவகரால் வனஜீவராசிகள் திணைக்களத்துக்கும் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் பெரும் சிரமத்துக்கு மத்தியில் ஒரு யானையை மீட்டனர். மற்றைய யானை நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் அதன் சடலம் மீட்கப்பட்டது. (ச-110)

# இலஞ்சம் கேட்ட பொலிஸ் கைது

கொழும்பு, ஜூலை 26

கொம்பனி தெரு பொலிஸ் பிரிவில் பணியாற்றும் பொலிஸ் அதிகாரி இலஞ்சம் கேட்ட குற்றச்சாட்டில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

கோட்டை நீதிமன்ற வளாகத் துக்கு அருகில் குறித்த பொலிஸ் அதிகாரி ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கேட்டபோதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச)

சாரதி தேவை
கட்டட நிர்மான வேலைக்கு டிரைவர் (Driver) தேவை.
தொடர்பு: 076 760 0403

காணி விற்பனைக்கு
றக்கா ஒழுங்கை
சுண்டுக்குளியில்
2 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
076 342 4705

வேலையாள் தேவை
வெதுப்பகம் ஒன்றிற்கு
வேலை தெரிந்த வேலையாள்
தேவை.
(பேஸ்ரி, கேக் செய்யக்கூடியவர்கள் விரும்பத்தக்கது).
தொடர்பு:- 074 001 5060
(CS/58936) J-1


கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு
இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.
குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.


"நாங்கள் உங்களோடு"
ஆர்க் .என். கம்பனி
•150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
• A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
• A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 535 7803

சுத்திகரிப்பு பணியாளர் தேவை
சாவகச்சேரி வைத்தியசாலையில் பணிபுரிவதற்கு சுத்திகரிப்பு பணியாளர்கள் தேவை. பணிபுரிய ஆர்வமுள்ளோர் தொடர்புகொள்ளவும்.
அங்கர் சுத்திகரிப்பு சேவை யாழ்ப்பாணம்.
விபரங்களுக்கு: 077 53 96 350
(CS 58945) A

கட்டிடம் வாடகைக்கு
A35 பிரதான வீதி, புன்னை நீராவி, விசுவமடு சந்தி,கிளிநொச்சியில் அமைந்துள்ள 52 x 33 நீள அகலம் கொண்ட கட்டிடம் வாடகைக்குண்டு. Bank, Insurance company க்கு கொடுக்கலாம்.
தொடர்புகளுக்கு: 077 215 8252, 077 744 6856
Swiss Whatsapp Regular Call: 004 177 9075 523

தச்சு வேலையாட்கள் தேவை
95/15 ஜயனார் கோவில் வீதி
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில்
தச்சு வேலையாட்கள் (மிசின்வேலை தெரிந்தவர்கள் மட்டும்) தேவை
தொடர்பு: 077 917 7281

ஓராண்டு நினைவஞ்சலி
மலர்வு 15 • 04 • 1932
உதிர்வு 19 • 07 • 2023

அமரர்
கந்தையா சரவணமுத்து
இரண்டு ஆண்டுகள் கடந்தும்
உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் என்றும் நிறைந்திருக்கும்
உங்கள் வாழ்க்கை ஒரு பாடமாக
எங்களுக்கு அமைய
உங்கள் ஆசி கிடைக்கட்டும்.
குடும்பத்தினர்
கிராம்புவில், சாவக்சேரி.

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org